# ஒலிக்கும் யாதவர் முரசு

## Olikkum Yadavar Murasu

Volume: 18 Issue: 7 May: 2023 Tamil Monthly Price Rs.10/- Annual Subscription Rs.120/-

முரசு : 18 ஒலி: 7 மே: 2023 தமிழ் மாத இதழ் விலை ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ.120/-

சோபகிருது ஆண்டு சித்திரை – வைகாசி மாதம்


| உறவுகளோடு இணைவோம் உயர்வோம் | யாதவமே பாரதம் பாரதமே யாதவம் |
|---|---|

## முரசு

வெற்றி எட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே!
வேதம் என்றும் வாழ்களன்று கொட்டு முரசே!
நெற்றி யொற்றைக் கண்ணனோடே நிர்த்தனம் செய்தாள்
நித்த சக்தி வாழ்க வென்று கொட்டு முரசே!

சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்.
நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்




சாதிக் கொடுமைகள் வேண்டாம்; – அன்பு
தன்னில் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்; –
தொழில் ஆயிரம் மாண்புறச் செய்வோம்

நிகரென்று கொட்டு முரசே! - இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே - பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்

அன்பென்று கொட்டு முரசே! - அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு;
துன்பங்கள் யாவுமே போகும் - வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனால்

- மகாகவி பாரதியார்

# OBITUARY




யாதவர் பேரவையின் மாநிலத் தலைவர் திரு. G.G. கண்ணன் யாதவ் அவர்களின் தந்தையார் திரு. கோபால் யாதவ் அவர்கள் 27.04.2023 அன்று இரவு 12 மணிக்கு வைகுண்ட பதவியடைந்தார்.

பாசமிகு தந்தையாரை இழந்து வாடும் திரு. G.G. கண்ணன் திரு. சம்பத் மற்றும் குடும்பத்தினர் ,உறவினர்கள் அனைவருக்கும் தமிழ் நாடு யாதவர் பேரவை , Y.P. நல அறக்கட்டளை , யாதவ் பவன் , ஒலிக்கும் யாதவர் முரசு நிர்வாகிகள் ,உறுப்பினர்கள் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீள் துயில் கொண்ட திரு. கோபால் யாதவ் அவர்களின் ஆத்மா இறைவனின் பாத நிழல்களில் இளைப்பாற பிரார்த்திக்கிறோம்.




சென்னை பள்ளிக்கரணை பேரூராட்சி முன்னாள் தலைவரும், சென்னை மாநகராட்சி முன்னாள் மாமன்ற உறுப்பினரும், நீலாம்பாள் பேலஸ் உரிமையாளருமான திரு.சி.ரெங்கன் யாதவ் Ex. M.C, அவர்கள் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயறுற்றோம்.

திரு.சி.ரெங்கன் யாதவ் அவர்களை இழந்து வாடும் அவர்களின் குடும்பத்தினர் ,உறவினர்கள் அனைவருக்கும் தமிழ் நாடு யாதவர் பேரவை , Y.P. நல அறக்கட்டளை , யாதவ் பவன், ஒலிக்கும் யாதவர் முரசு நிர்வாகிகள், உறுப்பினர்கள் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முரசு 18 ஒலி 7

# ஒலிக்கும்

## யாதவர் முரசு

யாதவர் பேரவையின் செய்தி மாத இதழ்

மே - 2023

பதிவு அலுவலகம்

**யாதவர் பேரவை**

Old No: 16, New No: 33, East Ramanathan Salai,
Egmore, Chennai – 600 031.
Email: yadavarperavai@gmail.com
Mobile: 94441 34142.

## யாதவ் பவன் திறப்பு விழா

சென்னை எழும்பூரில் கட்டி முடிக்கப்பட்டுள்ள **யாதவ் பவன்** வருகின்ற ஜூலை 2023 30 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று திறப்பு விழா நடைபெற இருக்கிறது என்பதை கடந்த ஏப்ரல் 2023 இதழில் தெரிவித்து இருந்தோம்.

நமக்கென்று தனியாக ஒரு இல்லம் அமைவது மிகசிறப்பானதாகும். யாதவர் பேரவை அலுவலகம், யாதவர் பேரவை நல அறக்கட்டளை அலுவலகம், கல்வி பிரிவு அலுவலகம், யாதவ் பவன் அலுவலகம், ஒலிக்கும் யாதவர் முரசு அலுவலகம் அனைத்தும் வருங்காலத்தில் அந்த யாதவ் பவன் இல்லத்தில் இருந்து தான் இயங்க இருக்கிறது என்பதைமகிழ்ச்சியுடன்தெரிவித்துக் கொள்கிறோம்.

கௌரவ ஆசிரியர்

**டாக்டர். ஆர். காந்தையா, M.S. (General)**

ஆசிரியர்

**இரா. ராஜாராமலிங்கம் யாதவ்** MA., PGDJMC

பதிப்பாளர் & அச்சிடுபவர்

**ஜி. உலகநாதன் யாதவ்** MABL

நிர்வாகம்

**கோதண்டராமன் யாதவ்**

தலைமை நிலையச் செயலாளர்

**ஜி. கே. ஜெய் குமார் யாதவ்**

பொருளாளர்

மணமாலை பகுதி

**கே. அசோக்குமார் யாதவ்**

ஆலோசனைக் குழு

**ஜி.ஜி. கண்ணன் யாதவ், YP தலைவர்**

**அரசு சீனிவாசன் யாதவ், YP செயலாளர்**

**ஜி.கே.ஜெய் குமார் யாதவ், YP பொருளாளர்**

<u>ஆசிரியர் குழு</u>

**முனைவர்.பேரா.எஸ்.துரைசாமி**

B. Sc., MBA., P.G.D.R.M., P.G.D.C.A., C.G.T., P.hd
Prof. & Research Guide MBA Dept. Vels University, Chennai

**ச. முத்துக்கிருஷ்ணன்**

B.Sc., MBA (கவிஞர் சமுகி)

கடையநல்லூர், தென்காசி

**செ.பாரதி**

B.Sc., D.A.E (கவிஞர் பாரதி)

முன்னாள் இராணுவ வீரர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை ஆய்வர் (பணி நிறைவு), சென்னை

<u>வடிவமைப்பு</u>

**செல்வி. பவித்ரா**

<u>புத்தக ஆக்கம்</u>

**டி. ஸ்டீபன்**


**(Seaman Graphics)**


யாதவர் பேரவையின் மகளிர் அணி, மருத்துவர் அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, தொழிலதிபர்கள் அணி,வர்த்தக அணி, கலை இலக்கிய அணி, தகவல் தொழில்நுட்ப அணி, இளைஞர் அணி, மாணவர் அணி ஆகியவை உருவாக்கப்பட்டு இவ்வணியினர் அனைவரும் அணி அணியாக சென்னைக்கு புறப்பட்டு வர தயாராகுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

யாதவ் பவன் திறப்பு விழாவை முன்னிட்டு ஒரு சிறப்பு மலரையும் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்த சிறப்பு மலருக்கான கட்டுரைகள், கவிதைகள், வாழ்த்துச் செய்திகள், விளம்பரங்கள் ஆகியவையும் வரவேற்கப்படுகின்றன.சிறப்புமலருக்கானபங்களிப்புகள் வருகிற ஜூன் 2023 15 ஆம் தேதிக்குள் யாதவர் பேரவை அலுவலகத்திற்கு வந்துசேர வேண்டும். யாதவ் பவனின் திறப்பு விழாவில் சந்திப்போம்.

**அன்புடன்**
இரா. ராஜா ராமலிங்கம் யாதவ்
**ஆசிரியர்**

# கோடை விடுமுறை



என்ன சார்.?. பத்து நாள் லீவ் போல.. ஏதாவது சம்மர் டூரா.?. கேட்டபடியே வந்தார் அவர்.

இல்லைங்க. பசங்களுக்கு லீவு விட்டாச்சு. கொண்டுபோய் ஒரு மாசம் எங்க அப்பா, அம்மாகிட்டே விட்டுட்டு வரலாம்னு இருக்கேன். அப்படியே நானும் பத்துநாள் தங்கிட்டு வரலாம்னு. ஊருக்குப் போய் நாளாச்சே.?.. பதிலளித்தார் இவர்.

அட என்ன சார் நீங்க.? உங்க ஊரே ஒரு கிராமம். வசதிகள் குறைவு. சிட்டி லைப்லேயே வாழ்ந்த பசங்க உங்களுக்கு. அவங்களுக்கு அங்க செட்டாகுமா.? போரடிக்காதா.? அப்பா, அம்மாவை இங்க வரவச்சிட்டு, ஜாலியா இருக்கறதை விட்டுட்டு.. என்றார் அவர்.

வசதியெல்லாம் மனசைப் பொறுத்ததுதாங்க. மனசு சந்தோசமா இருந்தா போதுங்க. அதுவுமில்லாம, ஊர்ல சொந்தக்காரங்க எல்லோருக்கும் நம்ம பசங்களையும், நம்ம பசங்களுக்கு அவங்களையும் முழுசா தெரிய வேணாமா.? எல்லாரையுமா இங்க வரவழைக்க முடியும்.?.. கேட்டார் இவர்.

சார்.. பையன் பத்தாவது எழுதியிருக்கான். அடுத்து கோச்சிங் கிளாஸ், கான்ஸன்ட்ரேஷன் கிளாஸ், யோகா கிளாஸ்னு ஏகப்பட்ட விஷயமிருக்கு. அதையெல்லாம் விட்டுட்டு, ஊருக்குப் போய் பசங்களோட எதிர்காலத்தை வீணாக்குறீங்க சார்.. என்றார் அவர்.

நீங்க சொன்ன அத்தனை கிளாசும் கூட்டுக் குடும்பத்துலேயே இருந்ததுங்க. அதை விட்டுட்டு பொழைக்க தனியா வந்ததிலதான், இப்போ எல்லாத்துக்கும் கோச்சிங் கிளாஸ் தேட வேண்டியிருக்கு.. என்றார் இவர்.

Competition அதிகம் சார். இப்போலேர்ந்தே எல்லாத்துக்கும் பசங்களைத் தயார் பண்ணணும். அதுக்குத்தான் சொல்றேன்.. என்றார் அவர்.

தன்னம்பிக்கையும், தைரியமும் தரதே நம்ம உறவுகள்தான் சார். அதை இழந்துட்டு, எதைக் கத்துக்கிட்டும் பிரயோஜனமே இல்லை சார்.. என்றார் இவர்.

புரியலை சார்.. என்றார் அவர்.

பிரச்சனையே அதான். இங்கே நிறைய பேர் தன் பசங்க எல்லாத்தையும் கத்துக்கணும்னு நெனக்கறாங்களே தவிர, வாழக் கத்துக் குடுக்கறதே இல்லை.

சொந்தக்காரங்க ஒவ்வொருத்தரும் ஒரு மாதிரி சார். அத்தனை பேரையும் பசங்களுக்கு எப்படி சமாளிக்கறது, எப்படி பழகறதுன்னு தெரிஞ்சாதான், நாளைக்கு வெளி உலகத்துல எப்படி எல்லோர்கிட்டேயும் பழகறதுன்னு தெரியும். அதுவுமில்லாம, நமக்காக இத்தனை பேர் இருக்காங்க அப்படின்ற தைரியமும் வரும். நாம தப்பு செஞ்சா இத்தனை பேர் கேட்பாங்கன்ற பயமும் இருக்கும்.

இதையெல்லாம் தாண்டி, வருஷத்துல இந்த ஒரு மாசத்தை எதிர்பார்த்து வருஷம் பூரா காத்திட்டிருக்கற வயசானவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. பணம் சம்பாரிக்க, படிக்க, பிழைக்கன்னு ஏதாவது ஒரு காரணத்தால பிரிஞ்சு கிடக்கிற குடும்பம், இந்த ஒரு மாசம் இணைஞ்சிருக்கறதால அவங்க அடையற சந்தோஷத்தை, நீ என்ன விலை கொடுத்து, எதை வாங்கித் தந்தாலும் கிடைக்காது.

இந்த வயசுல எங்க அப்பாவுக்கு நான் அடங்கி நடக்கறதையும், எங்க அம்மா மடில நான் படுத்து தூங்கறதையும் எம் பிள்ளை பார்த்தாலே போதும். பாசம்னா என்னன்னு புரிஞ்சுப்பான். என்னை கொண்டாட ஆரம்பிச்சுடுவான். இதையெல்லாம் கோச்சிங் கிளாஸ் சொல்லிக் குடுக்காது.

பசங்களுக்கு எல்லாம் தெரியணும்கறதைவிட, நல்லது தெரியணும்கறதுதான் முக்கியம்.

எம் பசங்க நிறைய சம்பாரிக்கறான்.. பெரிய அதிகாரி.. அப்படின்றது எனக்குப் பெருமையில்லை. எம் பையன் என்னை நல்லாப் பார்த்துக்கறான்னு முழுமனசோட நான் கடைசி காலத்துல சொல்லணும். எங்கப்பா என்னை நல்லா வளர்த்தார்னு அவன் சொல்லணும். அதுதான் முக்கியம். அதுக்கு நான் அதுமாதிரி நடந்து காட்டணும். ஏன்னா, எம் பசங்களுக்கு நான்தான் ஹீரோ. நான் செய்யறதுதான் சரின்ற நம்பிக்கை வரணும். அதை எங்க அப்பாகிட்டே நான் நடந்துக்கற முறை கத்துக் குடுக்கும்.

நமக்கும் வயசாவும். நாளைக்கு எம் பையனும் அப்பா ஆவான். அவன் வாழ்க்கைலையும் இதேபோல சம்மர் லீவுன்னு ஒண்ணு வரும். அப்போ அவன் என்னைத் தேடணும். அவனுக்காக மட்டுமில்லை.. அவனோட பசங்களுக்காகவும். அதுக்குத்தான் இவ்வளவும்... என்றார் இவர்.
அது வந்து.. என இழுத்தார் அவர்.

இதோ பாருங்க நண்பரே.. எம்மேல பாசமா இருப்பான்னு எம் பையன் என்னைக் கேட்கலை. ஆனா, நான் இருக்கேன். அதேமாதிரி, எம்மேல பாசமா இருப்பான்னு நான் அவனை கேட்க மாட்டேன். ஆனா, அவன் இருப்பான். அதுக்கு, பாசம், குடும்பம், உறவுன்னா அவனுக்குத் தெரியணும். ஒரு அப்பாவா நான் தெரிய வைக்கிறேன். எனக்கு எங்கப்பா கத்துக் குடுத்ததை நான் கத்துக்குடுக்றேன். இதுதான் இப்போதைக்கு தேவையான கோச்சிங் கிளாஸ்.

நாம விதைச்சது பெரிய மரமாகறது முக்கியம்னு சில பேர் எண்ணம். அது விஷமரமா யாருக்குமே பயனில்லாம போயிடக் கூடாதுங்கறது என் எண்ணம்.

தலைமுறைங்கறது நாம மட்டுமே இல்லை. நமக்கு முன்னாடி இருந்ததுங்கறதை நாம நிரூபிக்கறோம். நமக்குப் பின்னாடியும் இருக்கணும். அதையும் நிரூபிக்க வைக்கணும். அதுக்கு குடும்பம், உறவுகளை விட சிறந்த பல்கலைக்கழகம் எதுவுமே இல்லை.

சரி விடுங்க. நீங்க சம்மர் டூர் எங்க போறீங்க. ? கேட்டார் இவர்.
சிறிது நேர மௌனத்திற்குப் பின் சொன்னார் அவர்..
என் தலைமுறையை எம் பசங்களும் புரிஞ்சுக்கற இடத்துக்கு. நானும் புரிஞ்சுக்கணுமே...

வெளியேறும்போது அவர் மனதில் நிறைவு நடையிலேயே தெரிந்தது. உறவுகளோடு வாழ்வதைவிட, வேறெதையுமே வாழ்க்கை நம்மிடம் எதிர்பார்க்கப் போவதில்லை. ஏனெனில், உறவுகள்தான் வாழ்வின் படிப்பினை... அனுபவம் கற்றுத்தரும் ஆசான். ☺☺☺

டாக்டர் இரா. காந்தையா யாதவ்

# பொருளாதார இடஒதுக்கீடு

## இங்கர்சால் நார்வே

## தமிழர் ஆய்வுக் கூடம்

**சென்ற இதழ் தொடர்ச்சி**

மத்தியமனிதவள மேம்பட்டு துறையில் 63% பணியிடங்களை பொதுப்பிரிவினர் ஆக்கிரமித்துள்ளனர்.

இந்திய ஒன்றியத்தின் திட்டங்களை வகுக்கும் நிதி ஆயோக் அமைப்பின் 344 உயர்பதவிகளில் 254 பேர் பொதுப்பிரிவினர். அதாவது 74 சதவீதம். பேர் சிஏஜி அலுவலகத்தில் 67% பேர் உயர் சமூகத்தினர்.

1990 ஆம் ஆண்டில் இந்திய அளவில் அரசுதுறைகளில் கல்வியிலும், வேலையிலும் இருந்தவர்கள் பற்றி 1990 டிசம்பர் 23 ஆம் தேதி அன்று அச்சிடப்பட்ட சண்டே வார இதழில் வெளியிட்ட தகவல்கள் “இந்த கேள்விகளுக்கு பதில் தரும்”.

**FROM GOVT DEPARTMENTS TO RLYS, HRD TO NITI AAYOG**

Quota representation of Group A and Group B officers

| GOVT | TOTAL | SC | ST | OBC | GENERAL |
|---|---|---|---|---|---|
| Railways | 16,381 | 2,551 (15.57%) | 1,238 (7.56%) | 1,319 (8.05%) | 11,273 (68.82%) |
| 71 departments | 3,43,777 | 52,487 (15.27%) | 23,488 (6.83%) | 51,384 (14.94%) | 2,16,408 (62.95%) |
| HRD Ministry* | 665 | 126 (18.94%) | 43 (6.47%) | 56 (8.42%) | 440 (66.17%) |
| Cabinet Secretariat | 162 | 15 (9.26%) | 2 (1.23%) | 15 (9.26%) | 130 (80.25%) |
| Niti Aayog | 344 | 47 (13.66%) | 17 (4.94%) | 26 (7.56%) | 254 (73.84%) |
| President's Secretariat | 130 | 18 (13.85%) | 5 (3.85%) | 10 (7.69%) | 97 (74.62%) |
| Vice President's Secretariat | 13 | 2 (15.38%) | 0 | 1 (7.69%) | 10 (76.92%) |
| UPSC | 105 | 20 (19.05%) | 5 (4.76%) | 12 (11.43%) | 68 (64.76%) |
| CAG | 31,115 | 5,369 (17.26%) | 2,411 (7.75%) | 2,563 (8.24%) | 20,782 (66.79%) |

*Source: Data provided by DoPT, MoHRD, Railways to The Indian Express under RTI * Includes subordinate/attached offices*

மாநில தலைமைச் செயலாளர்கள் 26 பேரில் 19 (73.07%) பேர் பிராமணர்கள்.

துறைச் செயலாளர்கள் 500 பேரில் 310 (62%) பேர் பிராமணர்கள்.

ஆளுநர்கள் மற்றும் உதவி ஆளுநர்கள் 27 பேரில் 13 (48.15%) பேர் பிராமணர்கள்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் 16 பேரில் 9 (56.25%) பேர் பிராமணர்கள்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் 330 பேரில் 166 (50.30%) பேர் பிராமணர்கள்.

தூதர்கள் 140 பேரில் 58 (41.42%) பேர் பிராமணர்கள். பல்கலைக்கழக துணைவேந்தர்கள் 98 பேரில் 50 (51.02%) பேர் பிராமணர்கள்.

மாவட்ட நீதிபதிகள் 438 பேரில் 250 (57.07%) பேர் பிராமணர்கள்.

ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் 3300 பேரில் 2376 (72%) பேர் பிராமணர்கள்.

பாராளுமன்ற லோக்சபை உறுப்பினர்கள் 530 பேரில் 190 (35.85%) பேர் பிராமணர்கள்.

பாராளுமன்ற மேலவை உறுப்பினர்கள் 244 பேரில் 89 (36.48%) பேர் பிராமணர்கள்.

இந்தத் தகவலின் படி, நாட்டில் உள்ள பொதுத் துறைகளில் எல்லாம், பொதுப்பிரிவினர் ஆக்கிரமித்துள்ள நிலையில் பிற வகுப்பினருக்கு வேலைவாய்ப்பு திட்டமிட்டு மறுக்கப்படுகிறது.

பிற வகுப்பினரை தகுதி அற்றவர்கள் என்று பொய் கூறுகிறார்கள் என்பது மிக எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது.

| **Govt. passes Bill in Lok Sabha to provide 10% reservation for poor among upper castes** | | |
|---|---|---|
| | **So called 'poor' upper castes** | **OBC/SC/ST** |
| **%Of population (approx.)** | 15% | 58% |
| **Representation in Group A posts of Central Govt.** | 69.03% | 30.97% |
| **Group B posts** | 64.59% | 35.41% |
| | | **(* Source: DoPT annual report 2016 – 17)** |

அதற்கு முக்கிய காரணம் அதனை தேர்வு செய்யும் குழுவில் முற்பட்ட உறுப்பினர்களே இருப்பதே. பெரும்பான்மை இடங்களை அனுபவித்து கொண்டே மீண்டும் இந்த இட ஒதுக்கீட்டின் மூலம் பயன்பெற துடிக்கிறார்கள்.

**பணியில் பதவி உயர்வுக்கு இட ஒதுக்கீடு கிடையாது என்ற புதிய சட்டம் என்பது சரியா?**

பணியில் பதவி உயர்வுக்கு இட ஒதுக்கீடு கிடையாது என்ற சட்டம் அரசால் கொண்டுவரப்பட்டுள்ளது. இவைகள் எல்லாம் இட ஒதுக்கீட்டினை அழிக்கும் படிநிலை முயற்சிகள்.

இதில் ஒளிந்திருக்கும் ஆபத்து என்னவென்றால், ஒரு துறையில், கீழ்மட்ட வேலைகளுக்கு மட்டும், பொதுவெளியில் இட ஒதுக்கீடு முறையில் ஆட்களை எடுத்து பின்பு அதில் உள்ள உயர் சாதியினருக்கு மட்டும் பதவி உயர்வு கொடுக்கும் ஆபத்து இருக்கிறது.

காவல்துறையில் பலர் தற்கொலை செய்து கொள்ள காரணமாக இதை எழுதி வைத்துள்ளனர் மேலும் பலர் இதை காரணம் சொல்லி தீக்குளிக்கவும் முயற்சி செய்துள்ளனர். ஆதிக்க சாதிகளின் அடக்குமுறை ஒவ்வொரு துறையிலும் இருக்கிறது என்பது தொடர்ச்சியாக செய்திகளில் வரும் உண்மை நிலவரம்.

எந்த ஒரு வழிமுறையும் நெடுநாட்களாக அமலில் இருக்கும்போது, அதை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் என்ற முறையை தந்திரவாதிகள் கட்டியமைத்து விடுவார்கள். அதற்கு உதாரணம் தான், 100 சதவீத பிசி இட ஒதுக்கீடு மத்திய அரசு துறைகள் வெறும் 12% மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது வந்துள்ள இந்த சட்டம் அதை மேலும் குறைக்க உதவும்.

**தொடரும்....**

டாக்டர் இரா. காந்தையா யாதவ்

# உழைப்பாளர் தினம்



அகில உலகின் ஆகச் சிறந்த உபகரணம் கைவிரல்களே
மகிழ்ந்து மனிதன் உருவாக்கியது எல்லாம் விரல் திறனாலே
உடல் உழைப்பாலும் அறிவாலும் உருவானது தொழில் புரட்சி
அடாது உழை என விடாது துரத்தின முதலாளித்துவ ஆட்சி

கொடியது ஆயின கால வரையறை அற்ற உழைப்பால் ஓய்வு
விடியல் காணா ஓயாத உழைப்பால் உடலில் தேய்வு
வெடித்தது புரட்சி வேலைக்கு காலக்கெடு கோரி
படிந்தது ஆதிக்க சக்தி எட்டுமணி நேர வேலைக்கு மாறி

அனுபவிக்கும் அத்தனை வசதிக்கும் காரணம் உழைப்பே
அணுவைப் பிளந்து சக்தியை வெளிக் கொணர்ந்தது உழைப்பே
கனவாய் தோன்றியது எல்லாம் நனவாக்கியது உழைப்பே
வினாக்களை எல்லாம் விடை ஆக்கியது உழைப்பே

கடின வேலைகளை எளிதாக்க உருவாகியது இயந்திரம்
தடிமனான வேலைகளை எல்லாம் செய்வது இயந்திரம்
படிய வைத்து கண்காணிப்பது அறிவின் உழைப்பே
மடியாது இம்மாஉலகம் அறிவும் உழைப்பும் ஓயாத வரை

சிறந்த உலக கட்டு மானத்தை படைத்தது உழைப்பாளியே
விரைந்து பறக்கும் விமானத்தை படைத்தது உழைப்பாளியே
பரந்த கடலில் மிதக்கும் கப்பலை படைத்தது உழைப்பாளியே
திறந்த மனதோடு போற்றுவோம் உலக உழைப்பாளிகளை

செ.பாரதி

## இந்திய விடுதலைப் போரில் யதுகுல சிங்கங்கள்



தியாகி VK குப்புசாமி அவர்கள், ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் 24/3/1917ல் பிறந்தார். இவரது தந்தையார் வே.ரா கிருஷ்ணபிள்ளை வேலூரில் மிகப் பிரபலமான நகை வியாபாரி.

பள்ளிப் பருவத்திலேயே நாட்டின் விடுதலை உணர்வை தன்னகத்தே கொண்டுள்ள காரணத்தினால் தியாகி குப்புசாமி மாணவர்களை அணிதிரட்டும் தனி திறனுள்ள தலைவராக விளங்கினார்

வேலூருக்கு வந்த ஆங்கிலேய கவர்னர் ஹோப் என்பவருக்கு எதிராக கருப்பு கொடி காட்டியதால் கைது செய்யப்பட்டார். பள்ளி நிர்வாகம் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தால் பள்ளியில் தொடர்ந்து படிக்கலாம் என்று கூறவே இவர் மன்னிப்பு கடிதம் எழுதிக் கொடுக்க மறுத்து அதன் காரணமாக பள்ளியை விட்டு இவரும் மற்றும் இவரது நண்பரும் வெளியேற்றப்பட்டனர்.

தியாகி குப்புசாமியும் அவருடன் வெளியேற்றப்பட்ட கே எம் ரெட்டி என்ற மாணவரும் யாருக்கும் தெரியாமல் கல்கத்தா சென்று ரவீந்திரநாத் தாகூர் நிறுவியுள்ள சாந்திநிகேதனில் போய் சேர்ந்தனர்.சில நாட்கள் தன் மகனைக் காணாமல் தவித்த அவரது தந்தையார் கிருஷ்ணப்பிள்ளை பின்பு தனது மகன் கல்கத்தாவில் இருப்பதை அறிந்து நேராகச் சென்று ரவீந்திரநாத் தாகூரை சந்தித்து தனது மகனை வேலூர் அழைத்து வந்தார். வேலூரில் கோடையிடி தியாகி குப்புசாமி முதலியார், உபயதுல்லா, அண்ணாமலை பிள்ளை, போன்றவர்கள் பேசிய மேடைகள் பலவற்றில் குப்புசாமியும் கலந்து கொண்டு உரையாற்றினார்....!!!

1923ல் சட்டமறுப்பு இயக்கங்களில் கலந்துகொண்டு போலீஸ் தடியடிக்கு ஆளானார் பின்னர் வாரக்கணக்கில் சிறை வைக்கப்பட்டார். 1927இல் காந்தியடிகள் வேலூர் வந்திருந்தபோது தொண்டராக தியாகி குப்புசாமி பணிபுரிந்ததால் 1930 இல் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்க ஊர்வலத்தில் தியாகி குப்புசாமியிடமிருந்து கொடியை பறிக்க முயன்ற சார்ஜன்ட் பஸ்னஸ், கெட்டியாக பிடித்துக்கொண்ட தியாகி குப்புசாமி கொடியை விடவில்லை பின்னர் சார்ஜன்ட் அவர் கையை கடித்து கொடியை இழுத்ததால் பிடி தளர்ந்து கொடியை விட்டார்.......!!!!

1934 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி காந்தியடிகள் வேலூருக்கு ஹரிஜன நிதி வசூலுக்காக வருகை தந்தார். அப்பொழுது காந்தியடிகள் மேடையில் இருந்த பொழுது தனது தாய் தங்கையுடன் மேடைக்குச் சென்று வெள்ளி கேடயத்தை நினைவாக வழங்கினார். காந்தியடிகள் அந்த வெள்ளி கேடயத்தை ஏலத்தில் விட்டார். தானே எடுத்துக் கொள்வதாக தியாகி குப்புசாமி அவர்கள் காந்தியடிகளிடம் தெரிவித்தார்.....!!!!

எவ்வளவு கொடுப்பாய் என்று காந்தியடிகள் கேட்டதற்கு தியாகி குப்புசாமி தான் அணிந்திருந்த நகைகளையும் அவரது தாய் ஒரு வளையலையும் அவரது தங்கை ஒரு தங்கச் சங்கிலியும் நிதியாக வழங்கினர்.இந்த மொத்த நகைகளின் மதிப்பு அன்றைய தினம் ரூபாய் 5000 என்பது குறிப்பிடத்தக்கது.அதன்பின் காந்தியடிகள் அந்த கேடயத்தை குப்புசாமியிடம் வழங்கினார்.....!!!!

1934 ல் நடைபெற்ற இவரது திருமணம் முழுவதும் கதர் திருமணம் ஆகவே நடைபெற்றது.....!!!!

உப்பு சத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல்,ஜவுளி கடை மறியல், போன்ற நிகழ்வுகளில் பங்கேற்று துன்பங்களையும் துயரங்களையும் பல வகைகளில் அனுபவித்தார்.....!!!!

ஊர்வலங்கள் மாநாடுகள் பொதுக்கூட்டங்கள் என பலவற்றில் கலந்துகொண்டு ஏற்பாடுகளையும் தாமே முன்னின்று செய்திருந்தார்.

வட ஆற்காடு மாவட்டத்தில் அரசியல் மாநாட்டின் வரவேற்பு குழு செயலாளராக திறம்பட பணிபுரிந்தார்.....!!!!

1941 ல் நடைபெற்ற தனிநபர் சத்தியாக்கிரகத்தில் அங்கே ஒரு மாதம் சிறைத் தண்டனையும் ஆரணியில் ஹோம்கார்டுகளின் அக்கிரமங்களை கண்டித்து பொதுக்கூட்டத்தில்,பேசியதால் ஆறுமாத சிறை தண்டனையும், ரூபாய் 500 அபராதமும் விதிக்கப்பட்டது.....!!!!

1942ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டார். பின்னர் சிலம்புச் செல்வர் ம பொ சி நடத்திவந்த தமிழரசுக் கழகத்தில் இணைந்து திருத்தணியில் காங்கிரஸ் வேட்பாளர் விநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்டு குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.....!!!!

வேலூரில் செல்வந்தரின் மகனாகப் பிறந்து விடுதலை வேட்கையில் தியாகமாக இருந்த தியாகி குப்புசாமி அவர்கள் பின்னர் வாடகை வீட்டில் குடியிருந்து வறுமையில் வாடினார்....!!!!

இவர் யாதவர் சமூகத்தைச் சார்ந்தவர்.!!!

1985ம் ஆண்டு தனது 68வது வயதில் மறைந்தார், தியாகிகள் மறைந்தாலும் அவர் செய்த தியாகங்கள் கல்மேல் எழுத்துக்களாக என்றும் பொறிக்கப்பட்டிருக்கும்.....!!!!

இரா. ராஜா ராமலிங்கம் யாதவ்

## ஆங்கிலம் அறிவோம்....☟

- வாக்கியத்தின் நடுவே மேலும் கூடுதல் தகவலை அளிப்பதானால், அதிகப்படியான தகவலுக்கு முன்னும் பின்னும் இரண்டு சிறு கோடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

He robbed the Bank – the most popular in the city – for sheer adventure.

He robbed the Bank for notoriety, need – and adventure. இந்த வாக்கியத்தில் சாகசத்தைக் குறிக்கும் adventure என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

- Castor என்றால் என்ன?

பெரிய, கனமான மேஜை, கட்டில் போன்ற ஃபர்னிச்சர் (Furniture) சிலவற்றின் கீழ்ப் பகுதியில் சிறிய, பல திசைகளிலும் சுழலக்கூடிய, சக்கரங்கள் இருக்கும். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எளிதில் நகர்த்துவதற்கு இவை வழிசெய்யும். இவற்றை castors என்பார்கள்.


ஒரு பாட்டில். அதன் மேலே துளைகள் இடப்பட்டிருக்கும். அதாவது உள்ளேயிருக்கும் திரவம், துகள் வெளியே தெளிக்கப் படுவதற்கான வழிமுறை செய்யப்பட்டிருக்கும். இதுவும் caster அல்லது castor.

- “Behave as if you own the place” என்று கூறுவதுதான் விருந்தோம்பலின் உச்சம் இல்லையா?

அதற்கு முற்றிலும் எதிரான அர்த்தம் கொண்டது இந்த வாக்கியம். ஒரு நடத்தையை ஏற்றுக்கொள்ளாத போது இப்படிக் கூறுவோம். நமது வீட்டில் ஒருவர் எந்த ஒரு இங்கிதமும் இல்லாமல் நடந்துகொள்கிறார், தேவைக்கு அதிகமான உரிமைகளை எடுத்துக்கொள்கிறார் என்றால், “He behaves as if he owns the place” என்று எரிச்சலாகக் கூறுவோம்.

இரா. ராஜா ராமலிங்கம் யாதவ்


## புதிய வார்ப்புகள்



கௌரவ ஆசிரியர்

**டாக்டர். ஆர். காந்தையா, M.S. (General)**

94455 73750



ஆசிரியர்

**ஆர். ராஜாராமலிங்கம் யாதவ்** MA., PGDJMC

94441 10603




பதிப்பாளர் & அச்சிடுபவர்

**ஜி. உலகநாதன் யாதவ்**

MABL

94459 47384



மணமாலை பகுதி

**கே. அசோக்குமார் யாதவ்**

99943 33283



நிர்வாகம்

**கோதண்டராமன் யாதவ்**

தலைமை நிலையச் செயலாளர்

94440 50110




நிர்வாகம் & ஆலோசனைக் குழு

**ஜி. கே. ஜெய் குமார் யாதவ்**

பொருளாளர்

93810 63565



ஆலோசனைக் குழு

**ஜி.ஜி. கண்ணன்யாதவ், YP தலைவர்**

97913 99999




ஆலோசனைக் குழு

**அரசு சீனிவாசன் யாதவ், YP செயலாளர்**

94442 68292

ஆசிரியர் குழு



**முனைவர். பேரா.எஸ்.துரைசாமி**

94440 20265

ஆசிரியர் குழு



**ச. முத்துக்கிருஷ்ணன்**

91501 19371

ஆசிரியர் குழு



**செ.பாரதி**

94435 44143

வடிவமைப்பு

**செல்வி. பவித்ரா**

94441 34142

புத்தக ஆக்கம்

**டி. ஸ்டீபன்**

**(Seaman Graphics)**

99402 22866



## தலைமை அலுவலக நிர்வாகச் செலவு கணக்குகள்.

**April to May 2023**

**HQ.Sec Mr. Kothandaraman Yadav, Cell: 94440 50110**
**Treasurer Mr. Jaikumar Yadav , Cell:93810 63565**



HQ.Secretary

Treasurer

## Receipts

| S.No | Name | Receipt Book No. | Receipt Voucher No | Amount | Date | Payment |
|---|---|---|---|---|---|---|
| **1** | Dr. R. Rajesh | 13 | 604 | 5000 | 14/03/2023 | YPWT |
| **2** | Dr. V. Krishnamoorthy | 13 | 605 | 10,000 | 11/04/2023 | YPWT |
| **3** | Dr. Jagadeswari | 13 | 606 | 25,000 | 17/04/2023 | YPWT |
| **4** | J. Parimala | 13 | 607 | 1,00,000 | 26/04/2023 | YPWT |
| **5** | Thiru. Nallasivan | 298 | 3 | 120 | 05/05/2023 | OYM |
| **6** | Thiru. Thiruvengadam | 299 | 3 | 120 | 12/05/2023 | OYM |
| **7** | Thiru. T. Shanmuga Sundaram | 300 | 3 | 120 | 15/05/2023 | OYM |

**YPWT:** Yadhavar Peravai Welfare Trust **YP:** Yadhavar Peravai
**OYM:** Olikum Yadavar Murasu

## Expenses

| S.No | Head of Accounts | Amount |
|---|---|---|
| 1. | Postage | 848 |
| 2. | Stationery | 360 |
| 3 | Salary | 12,000 |
| 4. | To Thiru. Madhanagopal Yadav | 3,500 |
| 5. | Other Expenses | 2090 |

## இந்து சமய ஆன்மீக வினா விடைகள்

**1. கந்த சஷ்டி கவசத்தை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ பால தேவராயர் சுவாமிகள்.

**2. கந்த குரு கவசத்தை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ சத்குரு சாந்தானந்த சுவாமிகள்

**3. காயத்திரி மந்திரத்தை எழுதியவர் யார்?**

விடை: பிரம்மரிஷி ஸ்ரீவிசுவாமித்திரர்.

**4. ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம் என்னும் பாடலை இயற்றியவர் யார்?**

விடை: ஸ்ரீ அண்ணங்கராச் சாரியார், (ஹஸ்தகிரி அனந்தசாரியலு ஸ்வாமிகள்)

**5. திருப்புகழ் என்னும் நூலை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ அருணகிரிநாதர்.

**6. திருமந்திரம் என்னும் நூலை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ திருமூலர்.

**7. கந்தபுராணம் என்ன நூலை எழுதியவர் ?**

விடை: ஸ்ரீ கச்சியப்ப முனிவர்.

**8. மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ் என்னும் நூலை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ குமர குருபரர்.

**9. கந்தர் அநுபுதி என்னும் நூலை எழுதியவர் ?**

விடை: ஸ்ரீ அருணகிரிநாதர்.

**10. திருமுருகாற்றுப்படை என்ன நூலை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீநக்கீரர்.

**11. திருவிளையாடல் புராணம் என்னும் நூலை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ பரஞ்சோதி முனிவர்.

**12. அபிராமி அந்தாதி என்னும் நூலை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ அபிராமி பட்டர்.

**13. பெரிய புராணத்தை இயற்றியவர் யார்?**

விடை: ஸ்ரீசேக்கிழார்.

**14. குமாரஸ்தவம் என்ற நூலை இயற்றியவர்?**

விடை: ஸ்ரீ மத் பாம்பன் குமர குருதாச சுவாமிகள்.

**15. நான்மறை வேதங்களை தொகுத்வர் யார்?**

விடை: ஸ்ரீ வேதவியாசர்.

**16. தெய்வ மணிமாலையை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ ராமலிங்க அடிகளார் (வள்ளலார்).

**17. யோகாசனம் என்ன நூலை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ பதஞ்சலி முனிவர்.

**18. திருப்பாவை என்னும் நூலை எழுதியவர் யார்?**

விடை: ஸ்ரீ ஆண்டாள்.

**19. திருவெம்பாவை என்னும் நூலை இயற்றியவர்?**

விடை: ஸ்ரீ மாணிக்கவாசகர்.

20. **ஸ்ரீஹனுமான் சாலிசா பாடல்களை இயற்றியவர்?**

விடை: ஸ்ரீ துளசிதாசர்.

இரா. ராஜா ராமலிங்கம் யாதவ்

## மதுராஷ்டகம்

**பிருந்தாவன சாரங்கா இராகம்**

வல்லபாச்சாரியார் அருளிய ஸ்லோகம்: (கண்ணனின் அனைத்து அசைவுகளும் அனைத்துச் செயல்களும் அவனது உருவமும் அங்கங்களும் ஆடை அணிகலன்களும் இன்னும் பிறவும் இனிமையானவை (மதுரம்) என்று பாடும் பாடல்.)

பாடியவர்
நித்யஸ்ரீ

**கிருஷ்ண பக்தி கீதம்**

1. அதரம் மதுரம் வதனம் மதுரம்
   நயனம் மதுரம் ஹஸிதம் மதுரம்
   ஹ்ருதயம் மதுரம் கமனம் மதுரம்
   மதுரதிபதே ரகிலம் மதுரம்.

கனியிதழ் அழகு;
தண்முகம் அழகு;
கருவிழி அழகு;
குறுநகை அழகு;
அழகு உன்னுள்ளம்;
அழகு உன்நடையும்;
அழகின் அரசே!
அழகே எல்லாம்! (1)

2. வசனம் மதுரம் சரிதம் மதுரம்
   வசனம் மதுரம் வலிதம் மதுரம்
   சலிதம் மதுரம் ப்ரமிதம் மதுரம்
   மதுரதிபதே ரகிலம் மதுரம்.

சொல்மொழி அழகு;
சீர்மை அழகு;
நல்லுடை அழகு;
நளினம் அழகு;
அழகு உன் இயக்கம்;
அழகுந்தன் மயக்கம்;
அழகின் அரசே!
அழகே எல்லாம்! (2)

3. வேணுர் மதுரோ ரேணுர் மதுரஹ
பாணிர் மதுரஹ பாதெள மதுரௌ
ந்ருத்யம் மதுரம் ஸக்யம் மதுரம்
மதுரதிபதே ரகிலம் மதுரம்.

குழலது அழகு;
கழல்துகள் அழகு;
கரமலர் அழகு;
காலிணை அழகு;
அழகு உன்நடனம்;
அழகு உன்நட்பு;
அழகின் அரசே!
அழகே எல்லாம்! (3)

4. கீதம் மதுரம் பீதம் மதுரம்
புக்தம் மதுரம் ஸுப்தம் மதுரம்
ரூபம் மதுரம் திலகம் மதுரம்
மதுரதிபதே ரகிலம் மதுரம்.

பாடல் அழகு;
பருகுதல் அழகு;
உண்ணல் அழகு;
உறங்குதல் அழகு;
அழகு உன்னுருவம்;
அழகு உன்திலகம்;
அழகின் அரசே!
அழகே எல்லாம்! (4)

5. கரணம் மதுரம் தரணம் மதுரம்
ஹரணம் மதுரம் ஸ்மரணம் மதுரம்
வமிதம் மதுரம் ஷமிதம் மதுரம்
மதுரதிபதே ரகிலம் மதுரம்.

காரியம் அழகு!
கடத்துதல் அழகு!
கள்ளம் அழகு!
உள்நினைவழகு!
களித்தல் அழகு!
ஓய்வும் அழகு!
அழகின் அரசே!
அழகே எல்லாம்! (5)

6. குஞ்ஜா மதுரா மாலா மதுரா
யமுனா மதுரா வீசி மதுரா
ஸலீலம் மதுரம் கமலம் மதுரம்
மதுரதிபதே ரகிலம் மதுரம்.

மணிகள் அழகு!
மாலை அழகு!
யமுனைஅழகு!
அதனலை அழகு!
தண்ணீர் அழகு!
தாமரை அழகு!
அழகின் அரசே!
அழகே எல்லாம்! (6)

7. கோபீ மதுரா லீலா மதுரா
யுக்தம் மதுரம் முக்தம் மதுரம்
த்ருஷ்டம் மதுரம் ஷிஷ்டம் மதுரம்
மதுரதிபதே ரகிலம் மதுரம்.

கோபியர் அழகு;
லீலைகள் அழகு;
சேருதல்அழகு;
பிரிதலும் அழகு;
பார்வைகள் அழகு;
உபசரிப்பழகு;
அழகின் அரசே!
அழகே எல்லாம்! (7)

கோபா மதுரா காவோ மதுரா
யஷ்டிர் மதுரா ஸ்ருஷ்டிர் மதுரா
தலிதம் மதுரம் பலிதம் மதுரம்
மதுரதிபதே ரகிலம் மதுரம்.

கோபர்கள் அழகு;
கோ குலமழகு;
பிடிகோலழகு;
படைப்பும் அழகு;
வெற்றிகள் அழகு;
சாதனை அழகு;
அழகின் அரசே!
அழகே எல்லாம்! (8)

இரா ராஜா ராமலிங்கம் யாதவ்

## குல தெய்வமும், காவல் தெய்வமும்!

இன்றைக்குப் பலருக்கும் பலத்த ஒரு சந்தேகம் உண்டு.

- குலதெய்வம் என்றால் என்ன?
- காவல் தெய்வம் என்றால் என்ன?
- குலதெய்வமும், காவல் தெய்வமும் ஒன்றா அல்லது வேறு வேறா?

குலம் தழைக்க வேண்டும் என்றால், குலதெய்வத்தைக் கும்பிட வேண்டுமா? அல்லது காவல் தெய்வத்தைக் கும்பிட வேண்டுமா?

காவல் தெய்வத்தைக் கும்பிட்டால், குலதெய்வம் கோபித்துக் கொள்ளுமா?

இப்படி சந்தேகங்களுக்கு அளவே இல்லை. வாருங்கள் தெரிந்து கொள்வோம்.!

எந்த தெய்வத்தைக் கும்பிட்டாலும், வேறு எந்த ஒரு தெய்வமும் கோபித்துக் கொள்வதில்லை. தெய்வங்கள் எல்லாமே சக்தியின் அம்சங்கள்!

மனித குலத்தை மேம்படுத்துவதற்காக வந்த அவதாரங்கள். சரி... விளக்கத்துக்கு வருவோம்.

நம் சந்ததியினரை - அதாவது பரம்பரையைத் தொன்றுதொட்டுக் காத்து வருவதுதான் குலதெய்வம்.

‘என்னை முழுக்க நம்பி சரண் புகுந்துவிட்ட இந்தக் குடும்பங்களைக் காப்பது என் தலையாய கடமை’ என்று தன்னை வணங்குகிற குடும்பத்தின் மீது தன் கருணைப் பார்வையைச் செலுத்தி ஆசிகளை வழங்கும் குலதெய்வம்.

ஒரு குலம் தழைக்க உதவுவது பெண்கள்தான். அதாவது குடும்பத் தலைவிதான். எனவேதான் குலதெய்வம் என்றாலே, பெரும்பாலும் பெண் தெய்வமாகவே இருக்கும்.

அதே சமயம் சில குடும்பங்களுக்கு ஐய்யனார், சாஸ்தா, முனீஸ்வரர், முருகப் பெருமான் என்று சில ஆண் கடவுள்களும் குலதெய்வங்களாக இருந்து வருவது வழக்கம்.

காவல் தெய்வங்களாக இருக்கும் முனீஸ்வரன், அய்யனார் போன்ற தெய்வங்கள் சிலருக்கு குலதெய்வங்களாகவும் இருக்கலாம்.

நம் மூதாதையர்கள் எத்தனையோ ஆண்டுகளாகத் தங்கள் குலதெய்வங்களுக்குச் செய்து வருகின்ற வழிபாடுகளை எந்தக் காலத்திலும் நாம் விட்டு விடக்கூடாது.

குறைந்தபட்சம் வருடத்துக்கு ஒரு முறையாவது குலதெய்வக் கோயிலுக்குக் குடும்பத்துடன் சென்று, என்ன முறைப்படி அந்தத் தெய்வத்தை வணங்க வேண்டுமோ அதன்படி வணங்கிவிட்டு வரவேண்டும்.

**தொடரும்....**

இரா ராஜா ராமலிங்கம் யாதவ்

## EDUCATION DONORS LIST

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

Request everyone in this forum to contribute liberally & get IT exemption under 80G

Donors:

1.Dr. Mrs. Jagadeeswari Yadav chenthamarai yadav Chennai Rs. 25,000/-

2. Mr. Gopi karmegam yadav, Chennai Rs. 25,000/

3. Dr. V. Krishnamurthy yadav Chennai Rs. 10,000/-

4.Dr. Kanthaiah yadav Chennai Rs. 5,000/-

5. Dr. Jagannathan yadav, Chennai Rs. 10,000/-

6..Shri. Gunasekaran yadav Chennai Rs6001/-

7. Shri. GG Kannan yadav , Salem & Prez. Yadavar Peravai TN Rs. 25,000/-

8.shri Asokkumar yadav, Chennai & Treasurer YPWT TN Rs. 30,000/-

9. Shri. Muthukumar yadav , Prop. National Travels, Chennai Rs. 10,000/-

10. Sri. Subramanian Yadav ( Madhana Gopal yadav ) Chennai Rs 5,000/-

11. Dr. H. Muthukrishnan yadav, oncologist,Chennai Rs. 5000/-

12.Mrs. Shanthi yadav chennai, Rs. 1000/-

13. Shri. Leela vinothagan yadav Tiruchi / US Rs. 5000/-

14. Shri Rajan & Radhai Rajan yadav US Rs. 10,000/-

15.Shri. Lakshman yadav, Yadava college , Madurai Rs. 1000/-

16.Shri. Muthukumar Yadav, Pallavaram, Chennai Rs. 50,000/-

So far Rs 2,23,001/-

Target 10,00,000/- (Ten lakhs)

Last date for receipts 30.06.2023/-

Donate liberally & get IT exemption for your contributions

We thank you 🙏 for your liberal contribution

Team YPWT ( Education )




# மணமாலை

## மணமகள் விபரம்




| பெயர்-படிப்பு-தொழில் | நட்சத்திரம் | ராசி | தந்தைபெயர் | தொலைபேசி |
|---|---|---|---|---|
| K.ரேவதி, **B.com, BA** BNY Melon, (DLF Campus) | சுவாதி 17.03.1998 | துலாம் | P.கிருஷ்ணமூர்த்தி சென்னை | 9884305201 |
| S.ஹேமமாலினி **M.Sc.,** Data Entry Operater | பூசம் 10.02.1998 | கடகம் | D.சீனிவாசன் சென்னை | 93800 46432 |
| H. அக்ஷயா கிருஷ்ணன் (MBA (Shiping and ort Management) IN - Patient Billing (Apollo Hospital) | கார்த்திகை 25.08.1997 | ரிஷபம் | G. அரிகிருஷ்ணன் வேளச்சேரி | 9444973852 |
| S.விஷ்னுப்ரியா BSPA (BITS University) A Embryologist in Anova Fertility & Reproductive Heath, Toronto, Ontario, Canada | மகம் 3ம் பாதம் 03.04.1993 | சிம்மம் | S.சுப்ரமணியன் | 9444939883 9677219654 |
| K.விசாலி DCA HDFC | ரோகினி 29.07.1997 | ரிஷபம் | M.கிருஷ்ணமூர்த்தி சென்னை | 9841504512 |
| திவ்யா MA Socialogy | விசாகம் 02.08.1998 | | S. செல்வராஜ் அரியலூர் | |
| P. ரோகினி B.Com | சுவாதி 19/04/2000 | துலாம் | பன்னீர் செல்வம் சென்னை | 6385103789 7418362887 |
| N. பிரியதர்சினி, 10th | மூலம் 15.01.1999 | தனுசு | நர்குணன் திருப்பத்தூர் | 6382734980 |
| Dr. R.B. தாரகேஸ்வரி MBBS | சுவாதி 29.06.1993 | துலாம் | பாலாஜி செங்கல்பட்டு | 8680097440 9840359593 |
| R. கீர்த்தனா B.E | அவிட்டம் 24.04.1995 | | ராமசந்திரன் | 9443333285 |
